# அதிகரித்து வரும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமும் அதற்கான காரணங்களும்: மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை நீதி நிர்வாகப் பிரிவுகளை மையப்படுத்திய ஆய்வு

# The Reasons for the Rapid Increase in Child Abuse: A Study Based on Valaichenai Judicial & Administrative Divisions in Batticaloa Districts

A.L. Masliya[1] & M.I. Nasrin[2]
[1]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[2]Temporary Assistant Lecturer, Deprtment of Islamic Studies, SEUSL
fadthum9695@gmail.com, nasrinmi418@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

சமீப கால இலங்கையில் அதிகரித்து வரும் ஓர் சமூகப் பிரச்சனையாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் காணப்படுகின்றது சிறுவர்கள் தொடர்பான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பினும் நாளுக்கு நாள் இச் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமானது இடம்பெற்று வருகின்றமையை காணக்கூடியதாக உள்ளது. அண்மைக்காலமாக வாழைச்சேனை நீதி நிர்வாகப் பிரிவுகளில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமானது அதிகரித்துள்ளது குறிப்பாக COVID -19 தொற்றுக் காலப்பிரிவில் இவை தொடர்பான சம்பவங்கள் அதிகளவாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதை அறிய முடிந்தது. இவ் ஆய்வின் மூலமாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களில் அநேகமானவை நெருங்கிய உறவினர்கள்: பராமரிப்பாளர்கள் மற்றும் அயலவர்கள்(91%)மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையை கண்டறிய முடிந்தது. இதனால் சிறுவர்கள் பலாக்காரப்படுத்தப்படுவதுடன் பல்வேறு உடல் மற்றும் உளத் தாக்கங்களுக்குள்ளாகியுள்ளனர். அத்துடன் சிறுவர்களின் கல்வி நடவடிக்கைகளிலும், உள விருத்தியிலும் மற்றும் ஆளுமை விருத்தியிலும் பல்வேறு பாதிப்பைச் செலுத்திவருகின்றது. இவ்வாய்வானது சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கான காரணிகளைக் கண்டறிந்து அவற்றை தடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்வதையும், அதற்கான தீர்வுகளை இனங்காண்பதையும் எதிர்காலத்தில் ஏற்படும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களைக் குறைப்பதற்கான பரிந்துரைகளை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வானது விபரண, விளக்க மற்றும் பகுப்பாய்வு முறை என்பனவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்கான தரவுகள் பண்புரீதியான முறை (Qualitative method), தொகை ரீதியான முறை (Quantitative method) மூலம் பெறப்பட்டுள்ளதோடு முதலாம் நிலை மற்றும் இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத்தரவில் பிரதேச செயலக பதிவேடுகள், சிறுவர் நன்னடத்தை நிறுவனங்களின் முறைப்பாட்டுப் பதிவுகள் என்பவற்றினூடாகவும், இணையத்தளம் மற்றும் நூல்கள், சஞ்சிகைகள் என்பவற்றிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வாய்வின் முடிவாக, வாழைச்சேனை நீதி நிர்வாகப்பிரிவுகளில் அண்மைக் காலங்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் அதிகரித்துள்ளதால் சிறுவர்கள் உடலியல் மற்றும் உளவியல் ரீதியான பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளனர். எனவே, இப்பிரதேசத்தில் நிகழும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கான

காரணங்களைக் கண்டறிந்து மக்களுக்குத் தெளிவுபடுத்துவதனுடாக சிறுவர் பாதுகாப்பினை உறுதிப்படுத்துதலும் அதற்கான தீர்வுகளைக் கண்டறிந்து அதனைக் குறைப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றி இவ்வாய்வு ஆராய்ந்து தெளிவுபடுத்துகிறது.

**திறவுச் சொற்கள் :** COVID-19, சிறுவர் துஷ்பிரயோகம் , உளவியல் பிரச்சினைகள், சிறுவர் பாதுகாப்பு, வாழைச்சேனை நீதி நிர்வாகப் பிரிவுகள்

## ஆய்வின் அறிமுகம்

ஒரு நாட்டின் முக்கிய வளமாகக் கருதப்படுபவர்கள் சிறுவர்களாவர் இலங்கையினைப் பொருத்தவரையில் அண்மைக் காலங்களாக சிறுவர் மீதான துஷ்பிரயோகம் அதிகரித்து வருகின்றது. 2012 முதல் 2020 வரை நாட்டில் 5,891 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் பதிவாகியுள்ளதாக சமீபத்தில் தெரிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு மார்ச் மாத இறுதியில் இருந்து ஊரடங்கு உத்தரவின் ஆரம்ப வாரங்களில் மட்டும் 300 க்கும் மேற்பட்ட சிறுவர் பாலியல் துஸ்பிரயோகங்கள் பதிவாகியுள்ளன (NCPA 2019).

மேலும் மட்டக்களப்பு மாவட்ட பொலிஸ் பிரிவுகளிலிருந்து பெரும்பாலான வழக்குகள் பதிவாகியுள்ளன. அந்தவகையில் குறித்த 15 நாட்களில் 44 துஷ்பிரயோகங்களில் 8 வழக்குகள் கடுமையான பாலியல் துஷ்பிரயோகமாகவும் மற்றும் 17 சிறுவர் துஷ்பிரயோக வழக்குகளும் மட்டக்களப்பில் பதிவாகியுள்ளதை இவ் ஆய்வின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. சிறுவர்களின் பாதுகாப்பு விஷயத்தில் பெற்றோர்கள் அதிக கவனம் செலுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றது. கணிசமான எண்ணிக்கையிலான சிறுவர் துஷ்பிரயோக வழக்குகள் மறைக்கப்படுகின்றன. ஆனால் சில காலங்களாக குழந்தைகள் பாதுகாப்பு ஆணையத்தின் மீது மக்கள் மிகுந்த நம்பிக்கையை வளர்த்துக் கொண்டுள்ளதால் கடந்த சில மாதங்களாக அவர்கள் அதிக எண்ணிக்கையிலான அறிக்கையிடல்களைக் கொண்டுள்ளனர் (முதிதா பதிரானா 2019).

இந்தவகையில், வாழைச்சேனை நீதி நிர்வாகப் பிரிவுகளிலும் அண்மைக்காலமாக சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களால் சிறுவர்கள் பாதிப்புக்குள்ளாகின்றனர். இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்கும் வழிமுறைகளும், சட்டதிட்டங்களும், தண்டனைகளும், அமுல்படுத்தப்பட்ட போதிலும், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்கள் தொடர்பான சம்பவங்கள இப்பகுதியில் அதிகளவாக பதிவு செய்யப்படுகின்றது.

சிறுவர்கள் என்றால் யார்? சிறுவர் துஷ்பிரயோகம் என்றால்? என்ன? இப்பிரதேசங்களில் துஷ்பிரயோகங்கள் இடம்பெறுவதற்கான காரணங்கள் எவை? துஷ்பிரயோகங்களிலிருந்து எவ்வாறு சிறுவர்களைப் பாதுகாக்க முடியும்? போன்ற அறிவுடன் கூடியதான விழிப்புணர்வு இன்று ஒவ்வொரு தனிநபருக்கும் இன்றியமையாத ஒன்றாக மாறியுள்ளது. இந்த வகையில் இலங்கையில் 18 வயதிற்குக் குறைந்த சகலரும் சிறுவர்களாகக் கருதப்படுகின்றனர். 18

வயதுக்குட்பட்டவர்கள் அனைவரும் பிள்ளைகள் என்று சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சாசனம் குறிப்பிடுகின்றது. சிறுவர் துஷ்பிரயோகம் என்பது 18 வயதுக்கு குறைவான எந்தவொரு நபரையும் தவறான முறையில் ஏதேனுமொரு செயலில் ஈடுபடுத்திக் கொண்டு அல்லது நல்லதொரு செயலை மேற்கொள்ளாதிருக்கச் செய்வதை யாராவது செய்வாராயின் அதன் மூலம் சிறுவர் துஸ்பிரயோகம் இடம்பெறும். இத்துஷ்பிரயோக முறை 04 வகைகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

1. உடல்சார் துஸ்பிரயோகம்
2. உளவியல் துஸ்பிரயோகம்
3. பாலியல் துஸ்பிரயோகம்
4. பாரபட்சம் காட்டல்

இதில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் வளர்ந்த ஒருவர் அல்லது இளம்பிராயத்தைச் சேர்ந்த ஒருவர் அல்லது வயதில் மிக கூடுதலான அல்லது பலம்மிக்க ஒருவரினால் வலுக்கட்டாயமாகவோ, புரிந்துகொள்ள முடியாத நிலையில் உள்ள வயதில் குறைந்த ஒருவரை தமது பாலியல் திருப்திக்காக பயன்படுத்திக் கொள்ளும் போது சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளப்படுகின்றது. ஒருவருடைய பாலியல்பை மையமாகக் கொண்டு வீட்டிலோ,பாடசாலையிலோ, சிறுவர் இல்லங்களிலோ, மதஸ்தலங்களிலோ அல்லது வேறு எந்த இடங்களிலோ அவரது விருப்பத்துக்கு மாறாக அல்லது வற்புறுத்தல் மூலம் மேற்கொள்ளப்படும் எந்தவிதமான பாலியல் செயற்பாடுகளையும் நாம் பாலியல் துஷ்பிரயோகமென அடையாளப்படுத்தலாம் (ஆ.பேரின்பநாதன் 2013).

இப் பாலியல் துஷ்பிரயோகத்தால் சிறுவர்கள் பின்வரும் பாதிப்புக்கள் எதிர்நோக்குகின்றனர்.

- உடற் காயங்கள் ஏற்படல் பொதுவாக இனப்பெருக்க உறுப்புக்களிற்கிழிவு, இரத்தப்பெருக்கு, இதனால் உயிராபத்தும் ஏற்படும்.
- பாலியல் வன்புணர்வால் கர்ப்பமடைதல்.
- உயிரிழப்பு
- உளவியல் ரீதியாகப் பாதிக்கப்படுபவர். மனவேதனை. விரக்தி,பயம், பதட்டம், தன்னம்பிக்கைக்குறைவு என்பன ஏற்படல்.
- சமூகத்தில் ஒதுங்கி வாழ்தல் என பல்வேறுபட்ட உடல்,உள,சமூகப் பிரச்சனைகளுக்கு உள்ளாகின்றார்கள்.

அண்மைக்காலங்களில் இப்பிரதேசங்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகமானது நெருங்கிய உறவினர்கள் மூலமாகவே அதிகளவான பாலியல் தெந்தரவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பிரதேசங்கள்வாரியாக பல சமயப்பிரிவுகள் காணப்படுவதுடன் பல்லின கலாச்சாரங்களை பின்பற்றும் மக்கள் வசிக்கின்றார்கள். இதனால் சிறுவர்களுக்கிடையிலான கலப்புமுறைகளும், காதல், இளவயதுத்திருமணங்கள் என்பன மேற்கொள்ளப்படுவதனால். சிறுவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகின்ற நிலமைகள் காணப்படுகின்றது. அத்துடன் சில நேரங்களில் குற்றவாளியாகக் கருதப்படும் நபரும் கூட 18 வயதிற்குட்பட்டவராகவும்

காணப்படுகின்றார். சிறுவர்களுக்கு இடம்பெறுகின்ற பாலியல் துஷ்பிரயோகங்களில் 90% ஆனவை இடம்பெறுவது பிள்ளை மிக்க அறிமுகமான பிள்ளையுடன் ஏதேனுமொரு தொடர்பைக் கொண்டுள்ள நபர் மூலமாகும். பிள்ளை எவ்வகையில் அறியாத நபர்களினால் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாக்கப்படுவது 10% ஆகும் (NCPA 2019).

சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களை கட்டுப்படுத்துவது தொடர்பில் பெரும் சவாலாக இப்பிரதேசப்பிரிவுகளில் இருந்து வருகின்றது. அத்துடன் இப்பிரிவுகளில் வாழும் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு ஆளான பின்னர் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகின்றன. ஏனையவர்கள் கசப்பான முறையில் வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்கின்றார்கள். சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற சிறுவர்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இருமறை பாதிக்கப்பட்டு நீண்டகாலமாக நீதிக்காக காத்திருக்கின்றனர். இதன் பெறுபேறாக சிறுவர்கள் உளவியல் நோய் நிலைக்கு ஆளாவதுடன் பல்வேறு ஆளுமை சம்பந்தப்பட்ட பலவீனங்களுக்கும் முகம்கொடுக்கின்றார்கள். மேலும் நீண்டகாலம் கோபம் மற்றும் அதிருப்தியுடன் காலத்தைக் கடத்துவதுடன், அதிருப்திகரமான பிள்ளையாக மாறுகின்றார்கள். மேலும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான ஒரு பிள்ளையிடம் காணப்படுகின்ற பயங்கரமான இறுதி விளைவாக அவர்களும் எதிர்காலத்தில் துஷ்பிரயோகம் செய்வோராக மாறும் போக்கு காணப்படுகின்றது என்பதாகும். இது ஒரு பாரிய சமூகப் பிரச்சனையாகவும் சிறுவர்களின் எதிர்காலம் குறித்து அச்சநிலையை தோற்றுவிக்கும் ஒன்றாகவும் மாறியுள்ளது.

இலங்கையின் குற்றவியல் சட்டத்தின்படி, யாராவது சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டால் அவருக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டால் குற்றவாளி உடனடியாக 14 நாட்கள் தடுப்புக் காவலில் வைக்கப்படுவார். அதிகபட்சமாக 03 மாதங்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட பின் வழக்குத் தொடரப்படும். 03 மாதத்தின் பின் நீதிபதி விரும்பினால் அவருக்கு நிபந்தனையுடன் கூடிய பிணை (ஜாமின்) கொடுத்து வெளியில் அனுப்பலாம். இம்மாதிரியான சம்பவங்களில் தண்டனை பெற்றுக்கொடுப்பதற்கு சராசரியாக 8 வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியுள்ளதால் பெரிய அளவில் வழக்குகள் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கவேண்டும் (NCPA 2019).

## ஆய்வுப் பிரச்சினை

சமீப காலமாக (2019-2020) COVID -19 தொற்றுக் காலப்பிரிவில் வாழைச்சேனை நீதி நிர்வாகப்பிரிவுகளில் அதிகமான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்று வருகின்றது. இதனால் சிறுவர்கள் எதிர்காலம் தொடர்பான அச்சத்தினைத் தோற்றுவிப்பதுடன் தொடர்ந்து இவ்வாறான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் அதிகரிக்குமானால் சமூகப் பின்னடைவுகளையும், ஒழுக்கச்சீர்கேடுகளும் ஏற்பட்டு சிறுவர்களின் எதிர்காலத்தினை பாதிப்படையச் செய்யும் ஒன்றாக மாறிவிடும்.

**ஆய்வின் நோக்கம்**

பிரதான நோக்கம்

- இவ் நிர்வாகப் பிரிவில் இடம்பெறும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களை இனம்கண்டு அவற்றினை தடுப்பதற்கான வழி முறைகளை பரிந்துரைத்தல்.

துணை நோக்கங்கள்

- பாலியல் துஷ்பிரயோகங்களுக்கான காரணங்களைக் கண்டறிதல்.
- துஷ்பிரயோகத்துக்குட்பட்ட சிறுவர்களுக்கு சட்ட ரீதியிலான உதவிகளையும், உளவியல் ரீதியிலான சிகிச்சைகளையும் வழங்க இவ்வாய்வினை முன்வைத்தல்.
- சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாக்க சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வுகளை சமூக மட்டத்தில் ஓப்புவித்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது விபரண, விளக்க மற்றும் பகுப்பாய்வு முறை என்பனவற்றின் துணைகொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் இவ்வாய்வானது முதலாம் நிலைத் தரவுகள் (Primary Data) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இரு வழி முறைகளில் தரவுகளை சேகரித்துள்ளது. முதலாம் நிலைத் தரவில் நேர்காணல் (Interview), அவதானம் (Observation), கலந்துரையாடல்கள் (Discussion) மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவு சேகரித்தலில் பிரதேச செயலக அறிக்கைகள் (Divisional Secretariat Reports), சமூக ஆய்வு மைய வெளியீடுகள் (Social Research Centre Reports), பத்திரிகைகள் (Newspapers), சஞ்சிகைகள் (Magazines), நூல்கள் (Books), இலத்திரனியல் நூல்கள் (Electronic Books), இலக்கியக் கட்டுரைகள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன.

நேர்காணலின் மூலமாக ஒவ்வொரு பிரிவிகளில் இருந்தும் 6 நபர்கள் மொத்தமாக 30 பேர்கள் நேர்காணலுக்கு உள்வாங்கப்பட்டனர். இதில் கிராம சேவகர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மற்றும் சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர்கள், உளவளத்துணையாளர் போன்றவர்களிடமிருந்து கருத்துக்கள் பெறப்பட்டது.

**இலக்கிய மீளாய்வு**

Piyanjali De Zoysa (2008). **Child Sexual Abuse In Srilanka: The Current Of Affairs And Recommendation For Future.** எனும் ஆய்வில் சிறுவர்கள் ஆண்,பெண் என்ற அடிப்படையில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள். இதனால்

இலங்கையில் இவற்றினைத் தடுத்து சிறுவர்களின் எதிர்காலத்தினை சிறந்த முறையில் கொண்டு செல்ல சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம் செயற்பட்டு வருவதாக இவ்வாய்வின் மூலம் விளக்கப்படுகின்றது. இதன் முடிவில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான எந்த தடுப்பு முறைச்செயற்பாடுகளையும் மேற்கொள்ளாவிடின் நாட்டின் சமூக அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என கூறப்பட்டுள்ளது.

Sathiadas M.G, Mayoorathy .S , Varuni.K, Shalini Sri Ranganathan (2017). **Child Abuse In Northern Srilanka.** எனும் ஆய்வில் இலங்கையில் அதிகளவான பாலியல் துஷ்பிரயோகங்கள் நெருங்கிய உறவினர்களால் மேற்கொள்ளப்படுவதாக இவ்வாய்வில் அறியப்பட்டுள்ளதுடன். சிறுவர்களைப் பாதுகாக்கும் விடயத்தில் சிறுவர்கள் பாதுகாப்பு திணைக்களம் தனது சேவையினை முழு நேரமும் வழங்கும் நிலையில் உள்ளதாக இவ்வாய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

முஹம்மட் இயாஸ் L.R (2016). **சிறுவர் துஸ்பிரயோகம்: அம்பாறை மாவட்டத்தின் சாய்ந்தமருது பிரதேச செயளகப் பிரிவினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வில்** இப்பிரதேசத்தில் சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுவதனால் பல்வேறுபட்ட உடல்,உளவியல் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர் என்று விளக்கப்பட்டுள்ளது. இதனை தடுப்பதற்காக பிரதேசவாரியான முன்னேடுப்புகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும் என இவ்வாய்வினூடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

Beth M Schwartz- Kenney, Michelle Mccauley, Michelle A Epstein (2001). **Child Abuse : A Global View.** எனும் ஆய்வில் சகல நாடுகளும் சிறுவர் துஷ்பிரயோகங்களை தடுக்கும் செயற்பாடுகளை மேற்கொண்ட போதிலும், நாளுக்கு நாள் துஷ்பிரயோகங்கள் பதிவுசெய்யப்பட்டுக்கொண்டிருக்கின்றது. இதனால் குறிப்பிட்ட சில நாடுகளில் பொருளாதார, அரசில், சமூக ரீதியான பின்னடைவுகளும் ஏற்படுவதாக இவ் ஆய்வின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளது.

பேரின்பநாதன். A (2013). அவர்களால் எழுதப்பட்ட **சிறுவர் துஷ்பிரயோகம்** எனும் நூலில் சிறுவர்கள் என்றால் யார் எவ்வாறு சிறுவர்கள் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.துஷ்பிரயோகங்களை தடுப்பதில் சமூகமட்டத்திலும், நாடுரீதியாகவும் எவ்வாறான முன்னேடுப்புகள் மேற்கொள்ளப்படவேண்டும் என தெளிவுபடுத்தப்படுவதுடன். இப்புத்தகத்தில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விளக்கங்களினால் இந்நூல் இவ்வாய்விற்கு துணைசெய்கின்றது.

**கலந்துரையாடலும், பிரதான கண்டறிதல்களும்**

2019-2020 வரையான காலப்பகுதியினுள் வாழைச்சேனைப் நீதி நிர்வாகப் பிரிவுகளில் அதிகளவான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் இடம்பெற்றுள்ளதை இவ் ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. குறிப்பாக COVID -19 தொற்றுக்காலப்பிரிவின் நாடளாவிய ரீதியில் முடக்கப்பட்ட காலப்பகுதியில் இதன் தாக்கமானது அதிகரித்துள்ளதையும் காணக்கூடியதாக உள்ளது.

அட்டவணை - 01

| *DS DIVISION* | *UNDER 18 YEARS* | *CHILD ABUSE CASES (2019-2020)* |
|---|---|---|
| *Koralai Pattu North (Vihara)* | 7,122 | 14 |
| *Koralai Pattu West (Oddamavadi)* | 7,390 | 6 |
| *Koralai Pattu (Valachchenai)* | 7,099 | 13 |
| *Koralai Pattu South (Kiran)* | 8,832 | 18 |
| *Koralai Pattu Central-(Thiyavatwan)* | 9,217 | 9 |
| *Total DS Division (Children)* | **39,660** | **60** |

மூலம்: சிறுவர் நன்நடத்தைக் காரியாலயம், 2020


இந்த அட்டவணையின் மூலம் வாழைச்சேனை நீதி நிர்வாகப் பிரிவுகளில் அடங்கும் மொத்த சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கையானது 60தாக 2019-2020 வரை பதிவுசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதகளில் காணப்பட்ட சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களைப் பார்க்கும் போது இங்கு ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல் இரு பாலாரும் பாதிப்படைந்துள்ளனர். இப்பிரதேசத்தில் காணப்படும் அதிக பாலியல் ரீதியிலான துஷ்பிரயோகங்கள் அண்மைக்காலங்களில் அதிகரித்துக் காணப்பட்டுள்ளன. இவ் அட்டவணையில் பிரதேசப்பிரிவின் அடிப்படையில் நோக்கும் போது Koralai Pattu South (Kiran) பிரதேசத்தில் ஏனைய பிரதேச பிரிவிகளை விட கூடுதலான துஷ்பிரயோகப் பதிவுகள் இடம் பெற்றுள்ளது. இதற்கான காரணங்களில் பிரதானமாக தாக்கம் செலுத்துவது, பெற்றோர்களின் பிரிவு காரணமாக பாதுகாப்பில் உள்ளவர்களினால் துஷ்பிரயோகத்திற்கு ஆளாதல், முறையான பாதுகாப்பின்மையும் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுமாகும். ( பிரசாந்தினி 2020).

அத்துடன் இப் பிரிவிற்கு அடுத்த படியாக அதிக பாலியல் துஷ்பிரயோகங்கள் இடம்பெற்ற பிரிவுகளாக Koralai Pattu North (Vihara) 14 காகவும், Koralai Pattu (Valachchenai) 13 கவும் பாதிவாகியுள்ளது. இதனை அடுத்த பிரிவுகளிலும் இதனுடன் ஒப்பீட்டு பார்க்கும் போது மிகச்

சிறியளவிலான வித்தியாசத்தையே காணக்கூடியதாக உள்ளது. பெற்றோரின் கவனயீனமும், பொருளாதார நெருக்கடி காரணமாகவும் தமது பிள்ளைகளை உறவினர்களிடம் பாதுகாப்பில் விட்டுச்செல்வதால், இங்கு சிறுவர்கள் இலகுவில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

இங்கு சிறுவர்கள் அதிகளவில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு எளிதில் ஆளாவதற்குப் பிரதான காரணங்களாக குறிப்பிட்டுக் காட்டலாம்.

வரைபடம் - 01





- பலவீனமான வளர்ப்பு(அன்பு கிடையாமை)
- பெற்றோர் வெளிநாடு செல்லல்.
- குடும்ப வறுமை.
- பெற்றோரின் போதைப்பாவனை.
- தவறான நண்பர்களின் சகவாசம்
- இணையத்தைத் தவறாகப் பயன்படுத்தல்.

மூலம்: கலந்துரையாடல் மற்றும் நேர்காணல் 2020

சிறுவர்களுக்கு பாலியல் துஷ்பிரயோகத்தை தோற்றுவிக்கும் நபர்கள்

வரைபடம் - 02




மூலம்: சிறுவர் நன்நடத்தைக் காரியாலயம் 2020

இவ் வரைபடம் இப் பிரதேசங்களில் சிறுவர்களுக்கு பாலியல் தொல்லைகளை ஏற்படுத்திய நபர்களை எடுத்துக்காட்டுகின்றது. இதன் மூலம் 92% நெருங்கிய உறவினர்கள் மற்று அயலவர்கள் மூலம் சிறுவர்கள் பலாக்கரப்படுத்தப்பட்டுள்ளனர். சிறுவர்களுக்கு நெருங்கிய உறவுகள் மூலம் சரியான பாதுகாப்பின்மையை எடுத்துக்காட்டுவதாக இவை அமைகின்றது.

பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளான பெரும்பாலான குழந்தைகள் பெற்றோரின் திருமண பிரச்சினைகள் மூலமாகத்தான் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடுகின்றது ( முப்லிஹா 2020). தாய் மறுமணம் முடிப்பதன் மூலம் தாயின் கணவன் மூலம் பாதிப்படைதல், மற்றும் மாமா, சித்தப்பா, அண்டை வீட்டு உறவினர்கள் போன்றவர்கள் மூலம் இப்பிரதேச சிறுவர்கள் அதிகமாக பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்வாங்கப்படுகின்றார்கள். 5% தொல்களை சிறுவர்கள் நண்பர்கள், காதலர்கள் மூலமாக மேற்கொள்ளப்படுகின்றது. இதை சிறுவர் விரும்பி மேற்கொண்டாலும் துஷ்பிரயோகத்திற்கு ஆளான சிறுவர்களும், குற்றவாளியாக கருதப்படுபவரும் சிறுவர் என்ற பிரிவினுள்ளே பொரும்பாலும் அடங்குகின்றனர். 3% அடையாளம் தெரியாத நபர்களால் பலாக்கரப்படுத்தப்பட்டுள்ளனர்.

மிகவும் அதிர்ச்சியளிக்ககூடிய தகவல் என்னவென்றால் 90 வீதமான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களை ஏற்படுத்துகின்ற நபர்கள் உறவிகளுக்கு அறிமுகமானவர்கள் , சிறுவர்களின் சொந்தக் குடும்பங்களில் இருக்கக்கூடியவர்கள் . அதிகமாக இடம் பெறும் துஷ்பிரயோகங்கள் வீட்டுக்குள்ளேயே இடம் பெறுகின்றது 60 , 70 வீதமான துஷ்பியோகங்கள் சம்பவங்கள் அறிக்கையிடப்படுவதில்லை அல்லது வெளிப்படுத்தப்படுவதில்லை இதற்கான காரணங்களாக ஆண் பெண் பாதிக்கப்படுகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது அதிலும் குறிப்பாக பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் (அருட்சகோதரி சுபோஜினி 2020).

நெருங்கிய உறவினர்கள் மற்று அயலவர்கள் மூலம் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படுவதற்கான காரணங்கள் (றபீக்கா 2020).

- முரண்பட்ட குடும்ப சூழ்நிலையில் சிறுவர்கள் வாழ்தல்.
- பாதுகாப்பற்ற குடும்பத்தில் குழந்தைகள் வாழ்தல்.
- சிறுவர் துஷ்பிரயோகத்தினை தடுத்தல் மற்றும் அது தொடர்பான அறியாமை மற்றும் உதாசீனம்.
- சட்டத்தினை பற்றி அறியாதிருத்தல் மற்றும் அது தொடர்பான நிறுவனம் மீதான அதிருப்தி.
- பொறுப்பின்றி பிள்ளைகளை விட்டு தாய்மார் வெளிநாடு செல்லுதல்

போன்றவை முக்கிய காரணிகளாக அடையாளப்படுத்தப்பட்டன இந்த காரணிகளைப் அவதானிக்கையில் இவை சிறுவர்களின் எதிர்காலத்தினை சிதைக்கும் ஓர் அடிப்படை பிரச்சனையாக இங்கு இணங்காணப்பட்டது. சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாவதன் காரணமாக அவர்களில் கல்வி கற்றல் முறைகளில் கவனயீனம், பாடசாலை இடைவிலகல், அறிவு, மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சி பெருமளவு

பாதிப்படைதல்,வாழ்கை தொடர்பான அதிப்தி, சமூகத்தில் வித்தியாசமான கண்ணோட்டம் போன்றன சிறுவர்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கும் ஒன்றாக மாறும் இதனால் சமூகத்தில் பல்வேறு தீய விளைவுகள் ஏற்படுத்தும் (புவனேந்திரன் 2020).

ஒன்று தொடுகை மூலமாகவும் மற்றையது தொடுகை அற்றது என்பது இணைய மோசடி மூலமாக ஆபாசக்காட்சிகளை காண்பித்து பாலியல் புகைப்படங்களை சிறுவர்களுக்கு அனுப்பி காண்பித்து அதனூடாக சிறுவர்களை பயமுறுத்தி நல்லவர்களைாக நடித்து அவர்களின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளுதல் பாலியல் சார்ந்த தகவல்களை அனுப்புவது பெற்றுக்கொள்வது இவ்வாறான துஷ்பிரயோகமானது சிறுவர்களை தற்கொலை வரையில் இட்டுச் செல்லக்கூடிய ஒரு தன்மையுடையதாக காணப்படுகின்றது. பாதிப்படைந்த சிறுவர்களுக்கான உடலியல் மற்றும் உளவியல்சார் தொந்தரவுகளைத் தவிர்த்து முன்னேற்றமடையச் செய்யக்கூடிய ஆதரவுச் சேவைகள் இன்று பல்வேறு நிறுவனங்களிலிருந்தும் கிடைக்கக்கூடியதாக உள்ளன. மேலும், பாதிப்படைந்த சிறுவர்கள் பாடசாலையை விட்டு இடைவிலகுவதாலும், நீடித்த சட்ட தீர்ப்புக்களாலும், குறித்த பிரச்சினைகள் அதிகளவு மீடியாக்களில் விளம்பரப்படுத்தப்படுவதாலும், சிறுவர் துஷ்பிரயோகங்களை ஆராய்வதற்கும், முகாமை செய்வதற்குமான நிறுவனங்க்ளுக்கிடையில் சரியான ஒருங்கிணைப்பு இன்மையாலும் மென்மேலும் சிறுவர்கள் தாக்கங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் ( எல்.ரி. முகம்மட் இயாஸ் 2007).

சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் மிக அவதானமாக இருக்க வேண்டியவர்கள் பெற்றோர்களாவர். பாடசாலை ஆசிரியர்களுக்கும் இவ்விடயம் தொடர்பில் முக்கிய பொறுப்புளிகளாக காணப்படுகின்றாரடகள் பாடசாலைகளில் மாணவர்களுக்கு சிறுவர் உரிமைகள் தொடர்பிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வயதுப் பிரிவுக்கேற்ற வகையில் பாலியல் கல்வி போதிக்கப்பட வேண்டியது கட்டாயமானதாகும். இப்பிரச்சினை தொடர்பில் சமூகத்தைச் சேர்ந்த பல்வேறு தரப்பினரும் பங்களிப்பு வழங்க வேண்டியது மிக அவசியமாகும். சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தின் நிலைகளை குறிப்பிட்ட சமூகம் புரிந்துகொள்வது மிக முக்கியம். இலங்கை கலாச்சாரத்தில், ஒரு குழந்தை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதாக அறியப்பட்டால், அக் குழந்தைக்கு அதிகமான தாக்கங்கள் ஏற்படும் இவை நகர்ப்புறங்களை விட கிராமிய மட்டங்களில் அதிக பாதிப்புக்களை குழந்தைக்கு தோற்றுவிக்கும் (ஹேவர்ட் 2000).

இப்பிரதேசத்தில் இது போன்ற குற்றங்கள் நடப்பதைத் தடுப்பதற்காகவே சிறுவர்கள் மற்றும் மகளிர் அபிவிருத்தி அமைச்சு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. அதில் குறிப்பாக, சிறுவர்கள் பாலியல் ரீதியாகவோ அல்லது உணர்வு ரீதியாகவோ, உடலியல் ரீதியாகவோ பாதிப்புக்கு உள்ளாகுவதைப் பார்ப்பவர்கள் இது தொடர்பாக உடனடியாக இலவச தொலை பேசி அழைப்பின் மூலம் (1929) சிறுவர் பாதுகாப்பு அமைப்பிடம் முறைபாடு செய்வதின் மூலம் குறிப்பிட்ட குற்றவாளிக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், அப்பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர், பிரதேசத்தின் கண்காணிப்புக் குழு, பொலிஸ் நிலையம், பிரதேச

செயலக சிறுவர் மகளிர் பிரிவு, சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் போன்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலமும் சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

## முடிவும், பரிந்துரைகளும். (Conclusion & Recomendations)

சிறுவர்களுக்கு மிகவும் பாதுகாப்பான சமூக சூழலைக் கட்டியெழுப்புவது இன்று முழு உலகமும் எதிர்நோக்கியுள்ள சவாலாகும். இலங்கையும் மிக நீண்டகாலமாக இந்த சவாலை எதிர்நோக்கியுள்ளது. இதனால் நாட்டின் சமூக பொருளாதார வளர்ச்சியானது எதிர்கால சந்ததியினரின் அறிவுசார் வளர்ச்சியிலும், ஆளுமையின் மீதும் தங்கியுள்ளது. இதனால், குழந்தைகளின் வளர்ச்சியும், அவர்களது சுதந்திரமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இந்தவகையில், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கான முற்தடுப்பு முறைகளானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. இதன் மூலம் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் நிகழ்வதற்குச் சாதகமான நிலமைகளை நீக்குவதன் மூலம் அடைய முடியும். மேலும், பாதிப்படைந்த சிறுவர்களுக்குப் பாதுகாப்பு மற்றும் வாழ்க்கை தொடர்பான நம்பிக்கைகளை அளிப்பதன் மூலம் அவர்களுக்குத் தேவையானவற்றை வழங்கி, அவர்களையும் ஏனைய சாதாரண சிறுவர்களைப் போல வளரச் செய்து சமூகத்தில் சிறந்த பிரஜைகளாக ஆக்க முடியும்.

தாய் அல்லது தந்தை உயிரிழத்தல், தாய் அல்லது தந்தை குடும்பத்தை விட்டுச் செல்லல், விவாகரத்துச் செய்தல், குடும்பத்தில் போதை வஸ்து பயன்படுத்தல், வறுமை, குடும்ப வன்முறை, பிரிந்துள்ள குடும்ப அலகுகளில் வாழும் சிறுவர்களாக இருப்பதனால் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகக்கூடிய அச்சுறுத்தல் நிலையிலுள்ள சிறுவர்கள் என்ற வகையில் சமூகம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் (NCPA 2019).

இந்த ஆய்வின் அடிப்படையில் சிறுவர்கள் அதிகமாக பாலியல் துஷ்பிரயோகத்துக்குள்ளாவதைத் தடுப்பதற்கும், பாதிப்படைந்தவர்களுக்கான புனர்வாழ்வு அளித்து உதவுவதற்குமான பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

**i.** சிறுவர் பாலியல் துஷ்பிரயோக முறைகள்,துஸ்பிரயோகம் செய்வோரிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளல் மற்றும் பாதுகாப்பது (நல்ல தொடுகை, கெட்ட தொடுகை) பற்றி சிறுவர்களுக்கு விழிப்புணர்ட்டல்.

**ii.** சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்தினால் இலகுவில் பாதிக்கப்படும் தன்மையைக் குறைப்பதற்கும்,சிறுவர்களின் ஆற்றல் சக்தியை (அவர்களில் காணப்படுகின்ற வெளியே தெரியாத பலம்) விழிப்படையச் செய்தல், திறன் விருத்தி மற்றும் தேவையான

முகாமைத்துவத்தை மேற்கொள்ளல். (ஆளுமை விருத்தி, பாலியல் கல்வி, சிறுவர்களின் அறிவு, மனப்பாங்கு, திறன்களை விருத்தி செய்தல்.

**iii.** சிறுவர்களைத் தனியாக வீடுகளில் விட்டுவிட்டுச் செல்லும் போது பாதுகாப்பான சூழலை உருவாக்கிவிட்டுச் செல்ல அறிூட்டல்.

**iv.** சிறுவர்கள் வாழும் சமூக சூழல், பழகும் ஆட்கள் தொடர்பில் பெற்றோர் எப்பொரும் புரிந்துணர்வுடன் நடவடிக்கை மேற்கொள்ள பெற்றோர்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தல்.

**v.** சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் காணப்படுகின்ற சட்டம் மற்றும் துஷ்பிரயோக தவறுகளுக்கான தண்டனைகள் பற்றி சமூகத்தை விழிப்புணர்ூட்டல்.

**vi.** குற்றவாளிக்கு துரிதமாக விசாரணைகளை நடாத்தி மிக விரைவில் வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பித்தல், தண்டனை வழங்குதல் மற்றும் துஷ்பிரயோகம் செய்தவர்களை சமூகத்திலிருந்து அகற்றத் தேவையான நடவடிக்கைகளை சமூக மட்டத்திலிருந்து மேற்கொள்ளல்.

**vii.** பிள்ளையின் மனநிலையைக் கட்டியெழுப்பல் மற்றும் தேவையான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல்.

இப் பிரிவுகளில் சிறுவர்கள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உள்ளாகுவதைத் தடுக்க வேண்டுமாயின் இப்பணிகள் சமூகப் பணியாகக் கருதி சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் இவை தொடர்பாக சமூகத்திலுள்ள ஒவ்வொரு நபர்களும் விழிப்புணர்வு பெறுவதுடன் தமது பொறுப்பாகவும் உணரவேண்டும்.

**உசாத்துணைகள்**


*Child Help Line* (2019), தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை வெளியீடு.

Hayward, R. F. (2000). *Breaking the Earthenware Jar; Lessons from South Asia to End Violence against Women and Girls*. The Regional Office for South Asia: UNICEF.

*Koralai Pattu Central Divisional Secretariat* (2020). Divisional Secretariat In Eastern Provinces, Srilanka.

*Koralai Pattu Divisional Secretariat* (2020). Divisional Secretariat In Eastern Provinces, Srilanka.

*Koralai Pattu West Divisional Secretariat* (2020). Divisional Secretariat In Eastern Provinces, Srilanka.

National Child Protection Authority of Sri Lanka (2019). *The National Child Protection Authority: Report*. Colombo, Sri Lanka.

*Probation & Child Care Services Office* (2020). Judicial Division Valaichenai.

அருட்சகோதரி சுபோஜினி (2020-10-01), *இலங்கையில் 8 மாதங்களில் 4484 சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்,*

சிறுவர் *துஷ்பிரயோக வழக்குகளை விசாரிக்க விசேட தனி நீதிமன்றம்*, http://www.battinews.com ( 2020-08-22).

தயா சோம சுந்தரம், கோகிலா மகேந்திரன், சிவயோகன், சா, (2002), *சிறுவர் உளநலம்,* சாந்திகம் வெளியீடு, யாழ்ப்பாணம்.

தனுஜா, நா. (2020-07-22), *2020 இன் முதல் 15 நாட்களில் பெண்களுக்கு எதிராக கடுமையான பாலியல் வன்கொடுமைப்பதிவு சிறுவர் மீதான வன்கொடுமைத் தடுப்பு அமைப்பு,* வீரகேசரி.

திலகா சேவியர், (2005), *சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம்,* மனித உரிமைகள் இல்லம்.

மானா மக்கீன், (2002), *சிறுவர் பாலியல் கொடுமைகள்,* அஷ்டலட்சுமி பதிப்பகம்.

முகம்மட் இயாஸ், எல்.ரி. (2007), *சிறுவர் துஷ்பிரயோகம்,* பிரதேச செயலகம், சாய்ந்தமருது